www.tamilarangam.net

# 41ம் நாள் அஞ்சலி

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும்,
மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான

# தளபதி கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

**வீரஜனனம்**
02. 01. 1960

**வீரமரணம்**
16. 01. 1993

மண்மீட்புப் போரின்
மகத்தான கதாநாயகன்!
இருநாட்டு ஆக்கிரமிப்பாளரை
புறங்கண்ட தடத்தோள்கள்!
தாய் நாட்டு மக்களுக்கு வாழ்வளிக்க
புனர்வாழ்வு திட்டங்கள் தீட்டிய
சிந்தனையாளன் நம் தலைவன் கிட்டு!
பிற நாட்டு வாழ்விலும் அனுதினமும்
தாய் நாட்டு பணி செய்த பேராளன்
ஊருக்கு சென்று அமைதி ஏற்படுத்தவென
புறப்பட்ட நம் தலைவன் பாதையினை
வழிமறித்தார் இந்திய கடற்கொள்ளைக்காரர்.
அதன் விளைவாய் தமிழினத்தின் தலைவன்
சோதிமயமான தீயில் சங்கமித்த
காவியத்தை கேட்டே துடிக்கின்றோம்
ஏற்கின்றோம் உறுதிமொழி அவர் வழியில்
பணிசெய்வோமென்றே!



தலைவன் கிட்டுவுக்கும்
உடன் உயிர் நீத்தோருக்கும்
வீரவணக்கங்கள்

பிரான்சு வாழ் வரணி, மந்துவில், மீசாலை, கொடிகாமம் மக்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர வணக்கம்

தீயின் மடியில்: 16. 01. 1993.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரும் மத்தியகுழு
உறுப்பினரும் முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியும் சர்வதேச
செயலகப் பொறுப்பாளருமான கேணல் கிட்டு அவர்களும் மற்றும்
அவருடன் ஒன்றாக வீரமரணமெய்திய லெப். கேணல் குட்டிசிறி,
மேஜர் வேலன், கடற்புலிகள் கப்டன் நாயகன், கப்டன் றொசான்,
கப்டன் ஜீவா, கப்டன் குணசீலன், லெப். நல்லவன்,
லெப். தூயவன், லெப். அமுதன் அனைவருக்கும்

## எமது வீரவணக்கங்கள்





**தேசத்தை.......**
**நேசிக்கத் தெரிந்தவர்களுக்கு**
**மரணம் ஒரு தூசு**
**ஆமாம்.......**
**சுதந்திரத்தின் கனம்**
**மிக மிக அதிகமானதுதான்.**

தமிழர்கலை பண்பாட்டுக் கழகம்.
பிரெஞ்சுக்கிளை.

www.tamilarangam.net

# சமாதான தூதுவனுக்கு எமது
# அஞ்சலி



வீர உதயம்
02. 01. 1960

வீரத்தியாகம்
16. 01. 1993

# தளபதி கிட்டு

## சதாசிவம் கிருஷ்ணகுமார்

உலக அரங்கில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை
தெளிவு படுத்தி, சர்வதேச நாடுகளின் கருத்துக்களைக் கவர உழைத்தவர்.
தமிழர் பிரச்சினைக்கு, உறுதியான நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிக்கு
சர்வதேச நாடுகளின் உதவியைக் கோரியவர்.
சாதகமான சர்வதேச கருத்துருவாக்கம் ஒன்றை உருவாக்கி,
அந்நாடுகளின் அபிப்பிராயங்களுடனும் ஆலோசனைகளுடனும் தமிழீழம்
நோக்கிச்சென்றவர்.
சமாதானத்தை, அமைதியை ஏற்படுத்தும் நம்பிக்கை அறிகுறிகளைச்
சுமந்து சென்ற அந்தச் சமாதானப் புறா இந்தியக் கழுகுகளின் பார்வையில்
பட்டுவிட்டது.
அதன் கோரப் பசிக்கு அது இரையாகி விட்டது.
சமாதானத்தை விழுங்கும், அமைதியை மெல்லும் இந்தியக் கழுகுக்கு
எங்கள் வீரத் தளபதி இரையா?
எங்கள் வீரத்தளபதியை இழந்து மனம் பதைபதைத்தோம்.
உள்ளம் கலங்கி கண்ணீர் விதைத்தோம்.
துவழ்தல் சிறு கணமே! மறுகணமே எழுவோம்! நிமிர்வோம்!
வீரவேங்கைகள் கால் பதித்த தடம் பார்த்து நாம் நடப்போம்.

**இவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட ஏனைய 9 போராளிகளுக்கும்
எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.**

**மன்னார் மக்கள்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர அஞ்சலி

**தமிழகமே...! எம்மின அழிவின் தரவுகள்..**
**இன்னும் உனக்குப் போதாதா?**
**தருணத்திற்காய் தள்ளிப் போடுகிறாயா?**
**உன் வீரத்திற்கிட்டிருக்கும் விலங்கறுப்பதெப்போ...?**

உன்னை வழி நடத்தவென வந்தவர்கள்..
உன் ஒப்புதல் வாங்கித் தம் கயானாவை நிரப்புகிறார்.
உன் குருதியை உறிஞ்சி தாம் கொழுக்கின்றார்.
உன் நிலையோ அழிவின் வாயிலை நோக்கி......
இந்நிலை என்று உணர்வாய்.
உன் தலை என்று நிமிரும்.
உன் நிகர் என்று மிளிரும்.
உன் வீரம் என்று முழங்கும்.

ஆ....! இந்தியாவே உன்
ஆதிக்க வெறியென்னும் அகோரப் பசிக்கு
அனலிடைப் புழுப்போல் துவளும் நம்
இனத்தின் இரத்தமும் தசையுமா
தீனியெனத் தேடுகிறாய்.

உன் கடலின் நீருக்குமா
கற்றுக் கொடுத்திருக்கிறாய்.
உன் கடல் கடித்தெடுத்த எம்
தளபதியினதும்
கண்மணியிலுமுயர்ந்த எம்
கடல் வேங்கைகளினதும்
உயிராவிகள் ஒன்றெனக் கருவாகி
காலத்தால் வளர்க்கப்பட்டு
கடும் புயலாகி ஒரு நாள்
உன்னைத் தாக்கும் - இவர்களின்
ஊனமும் உதிரமும் கரைந்த
உன் கடலிலிருந்து ஆவியாய் மேலெழுந்து
விண்ணிலொடுங்கியோர் நாள் உன்
மண்ணில்ப் பெருவெள்ளமாகி உன்னையழிக்கும்:
இது நிச்சயம்.
இதுதான் இனி எம்மக்கள்.



## கேணல் கிட்டு

**வீரப்பிறப்பு:**
**02.01.1960**

**வீரச்சாவு:**
**16.01.1993**

**பிரான்சு வாழ் தொல்புரம், சுழிபுரம், மூளாய், பொன்னாலை மக்கள்.**

www.tamilarangam.net

# 41ம் நாள் அஞ்சலி

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும்,
மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான

# தளபதி கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

**வீரஜனனம்**
02. 01. 1960

**வீரமரணம்**
16. 01. 1993

மண்மீட்புப் போரின்
மகத்தான கதாநாயகன்!
இருநாட்டு ஆக்கிரமிப்பாளரை
புறங்கண்ட தடத்தோள்கள்!
தாய் நாட்டு மக்களுக்கு வாழ்வளிக்க
புனர்வாழ்வு திட்டங்கள் தீட்டிய
சிந்தனையாளன் நம் தலைவன் கிட்டு!
பிற நாட்டு வாழ்விலும் அனுதினமும்
தாய் நாட்டு பணி செய்த பேராளன்
ஊருக்கு சென்று அமைதி ஏற்படுத்தவென
புறப்பட்ட நம் தலைவன் பாதையினை
வழிமறித்தார் இந்திய கடற்கொள்ளைக்காரர்.
அதன் விளைவாய் தமிழினத்தின் தலைவன்
சோதிமயமான தீயில் சங்கமித்த
காவியத்தை கேட்டே துடிக்கின்றோம்
ஏற்கின்றோம் உறுதிமொழி அவர் வழியில்
பணிசெய்வோமென்றே!



தலைவன் கிட்டுவுக்கும்
உடன் உயிர் நீத்தோருக்கும்
வீரவணக்கங்கள்

பிரான்சு வாழ் வரணி, மந்துவில், மீசாலை, கொடிகாமம் மக்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர வணக்கம்

எம் இனத்தின் அகல் விளக்கே!

தைத் திங்கள் 13ம் நாள் எம்மின அடிமை விலங்கொடிக்க எண்ணற்ற சிந்தனைகளுடன் ஆர்ப்பரிக்கும் வங்கக் கடலில் பயணம் செய்தாயாம். பாரதத்தின் பரதேசிக் கூட்டமொன்று உங்களைச் சுற்றி வளைத்ததாம். 16ம் நாள் நீயும் உன்னுடன் நவநாயகர்களும் சாத்தான் கரம் படக்கூடாதென்று கப்பலுடன் உங்களையே அழித்து. நீலக் கடலின் நிறத்தையே மாற்றிய வீரகாவியத்தைக் கேட்டு துடித்தோம். மறு கணம் உன் வழி பற்ற திடம் கொண்டோம்

அரும்பாய்
02.01.1960



வித்தாய்
16.01.1993

## கேணல் கிட்டு

அன்றொருநாள்!
சன்னதித் தேரை சீருடை ஒன்று
தரித்து வந்த இனமத வெறியர் கூட்டம்
தீக்கிரையாக்கியபோது, திடங்கொண்ட
உன் தோள் கொண்டு விரட்டிய
செயலை வியந்து நின்று பார்த்தோம்.

வல்வை இராணுவ முகாம் காவலரன்களுடன்
துப்பாக்கி மொழிபேசி எதிரியை முடக்கி வைத்த
உன் வீரச்செயலை எப்படி எளிதில் மறக்க முடியும்.

பருத்தித்துறையில் நிலை கொண்ட எதிரி நாளுக்கு நாள்
எம்மவர்களைக் காவு கொண்ட போது,
வீரச் சமர் புரிந்து ஒவ்வொரு குச்சொழுங்கைகட்குள்ளும்
ஆழப்பதிந்த உன் பாதச் சுவடுகளை
பாவிகள் நாம் ஒரு போதும் மறவோம்.



"சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும்
சீற்றம் குறைவதில்லை", என்ற வரிகளுக்கு
கட்டியம் கூறி சென்று விட்டாய்.
முப்பத்து மூன்று வயதுதனில் மாவீரனாகிவிட்டாய்.
சத்தியமாய் உன் நினைவு நீங்கிடா
எம் மனதை விட்டு என்றும்.
உன் பாதை பின் தொடருமட்டும்
நித்தம் இனி நித்திரையும் வராதெமக்கு.

இவருடன் கடலினில் சங்கமமாகிய ஒன்பது வீர
மறவர்களுக்கும் எமது வீரஅஞ்சலிகளைச்
செலுத்துகின்றோம்.

பிரான்ஸ் வாழ் கரவெட்டி மக்கள்

www.tamilarangam.net



# வீர வணக்கம்

## தளபதி கிட்டு

**வீரச்சாவு: 16 – 01 – 1993**

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான தளபதி கிட்டு, இந்திய அரசின் கோரச் சதியால் 16. 01. 1993 இல் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

போர்க்களத்தில் வீரத் தளபதியாய், மதிநுட்பம்வாய்ந்த போர்த்தந்திரியாய், அரசியல் நுணுக்கம் அறிந்தவராய், அஞ்சா நெஞ்சனாய், சிறந்த நிர்வாகியாய், சித்திரக்கலைஞனாய்.....

நிமிர்ந்து நின்று தேசத்தை நிமிரவைக்கப் போராடிய ஒரு தீப்பிழம்பு தீயினில் கலந்தது.

கபடம், நயவஞ்சகம், சூழ்ச்சி, பேடித்தனம், சதி இன்னும் பிற அவலட்சணங்களை தன்னகத்தே கொண்ட இந்தியா, தனது தலைக்கு மேலும் ஒரு அவமானக் கிரீடத்தைச் சூடிக்கொண்டது.

திலீபன், குமரப்பா, புலேந்திரன், ஜொனி, பூபதிஅம்மா, வரிசையில் இந்திய அரசு தனது வெறித்தனமான சதிப் பசிக்கு தளபதி கிட்டுவையும் பலிவாங்கிக் கொண்டது.

சர்வதேச நாடுகளின் சமாதான யோசனைகளைக் காவியவராய் தமிழீழம் நோக்கிச் சென்ற தளபதி கிட்டுவை, அவர் சென்ற கப்பலுடன், சமாதானத்தின், அமைதியின் விரோதியான இந்திய அரசின், கடற்படை, சர்வதேசக் கடலில் வைத்து சுற்றிவளைத்தது. இந்திய கடல் எல்லைக்குள் கப்பல் கொண்டு செல்லப்பட்டது.... யாவும் இந்திய அரசு எதிர்பார்த்தபடியே நிகழ்ந்துவிட்டது!

ஆனால் தமிழீழ மக்கள் எதிர்பார்த்திராதது நடந்துவிட்டது.
வீரகாவியம்தான்! என்றாலும் சோகம் கவ்விக் கொண்டது.

தளபதி கிட்டுவும், மேலும் 9 பேரும்.......
கோரத்தீயில், ஆழக்கடலில், மூசும் காற்றுப் பெருவெளியில் கலந்துவிட்டனர்.
எங்கள் தேசம் சிலிர்த்துக் கொண்டது! எங்கள் தளபதி எங்கே......?

இடிந்துபோய் உட்காரும் மனம் படைத்தவர்களல்லர்; நிமிர்ந்து வாழ் என்ற வீரம் படைத்தவர்கள்!

தமிழீழம் ஓயாது! அவர்தம் புனித நினைவுடன் எதிரியின் பாசறை நோக்கி தன் எல்லைகளை நீட்டும்!

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

**தமிழீழ விடுதலைப் புலிகள் – பிரெஞ்சுக் கிளை**

பதிப்பு: 17. 01. 1993

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்